تاميلي

தமிழ்

# أحكام التيمم

# வுழூஃ செய்வதற்கு நீர் இல்லையெனில் என்ன செய்வது?


ஆசிரியர்:

**கலாநிதி அஷ்ஷெய்க் ஹைதம் முஹம்மத் சர்ஹான்**

முன்னால் மதீனா புனித பள்ளி கலாசாலை ஆசிரியர் ,

மஃஹத் சுன்னாஹ் இணையதள மேற்பார்வையாளர்.



www.alsarhaan.com

WWW.MAHADSUNNAH.COM

## பிரயாணத்திலோ அல்லது ஊரிலோ வுழூஃ செய்வதற்கு நீர் இல்லையெனில் என்ன செய்வது?

இதற்கான தீர்வு தயம்மும் ஆகும். தயம்மும் என்பது:

நீர் கிடைக்காது போனால் அல்லது நீரை பயன்படுத்துவதற்கு முடியாது போனால் வுழூஃ, குளிப்பு ஆகிய இரண்டிற்கும் பதிலாக சுத்தமான மண்ணால் முகத்தையும் இரு மணிக்கட்டுகளையும் தடவுவதற்கு சொல்லப்படும்.

திருமறையில் தயம்மும் பற்றிய வசனத்தில் இடம்பெற்றுள்ள ”ஸயீத்” என்பது பூமியின் மேற்பரப்பைக் குறிக்கின்றது, அது மண்ணாகவோ அல்லது வேறு எதுவாகவோ இருக்கலாம்.

ஒரு நோயாளி நீரைப் பயன்படுத்தினால் தன் உயிருக்கு ஆபத்தென உறுதி கொண்டால், அல்லது நோய் குணமடைய தாமதமாகும், அல்லது அதிகரிக்கும் என உறுதி கொண்டால் மண்ணைப் பயன்படுத்தி தயம்மும் செய்யலாம்.

இதை உறுதி செய்ய உலக நியதிகளை அடிப்படையாகக்கோண்டோ அல்லது முஸ்லிமான நம்பகத்தன்மையுள்ள திறமையான வைத்தியர் ஒருவர் முலமோ உறுதிசெய்யலாம்.

மேலும் எழுந்து நடக்க முடியாத, உதவிக்கு யாருமற்ற நோயாளி நீர் கிடைக்காத போது தயம்மும் செய்து தொழுகையை நிறைவேற்றலாம். பின்னர் அத்தொழுகையை மீட்டத் தேவையில்லை.

அதேபோன்று கடுங்குளிரால் உயிராபத்து ஏற்படும் என பயந்தால், அல்லது நோய்வாய்ப்பட நேரிடும் என்றோ அல்லது நோய் அதிகரிக்கும் என்றோ பயப்பட்டாலும் தயம்மும் செய்யலாம்.

அதேபோல் தன் கைவசமுள்ள நீர் எதிர்காலத்தில் தன் பயணத்தின் போது தன்னுடன் உள்ள சக மனிதனுக்கோ, பிராணிக்கோ தேவைப்படும் இல்லையெனில் உயிராபத்தை சந்திக்க நேரிடும், அல்லது கடும் சிரமத்தை கொடுக்கும் என்றிருந்தாலும் அந்த

நீரை வைத்து விட்டு தயம்மும் செய்து கொள்ளலாம்.

தயம்மும் ஊரிலும் பிரயாணத்திலும் செய்து கொள்வதற்கு அனுமதி உண்டு.

## செயல்முறை:

ஒரு முறை மண்ணில் கையை அடித்து முகத்தையும் இரு மணிக்கட்டுகளையும் தடவிக் கொள்ளல்.

நபி (ஸல்) அவர்கள் தனது இரு கைகளாலும் மண்ணில் அடித்து பிறகு அதை வாயினால் ஊதிவிட்டு பின்னர் தனது முகத்தையும் இரு மணிக்கட்டுகளையும் தடவிக் கொண்டார்கள். பின்னர் இப்படி செய்வது போதுமானதாகும் என்றும் கூறினார்கள்.

(இப்னுமாஜா:569)

வுழூஃவையும், குளிப்பையும் முறிக்கும் காரியங்கள் அனைத்தும் தயம்மத்தையும்

முறித்துவிடும். ஏனெனில், தயம்மும் இவ்விரண்டிற்கும் பதிலாகவே இருக்கின்றது.

தயம்மம் செய்தவர் தொழும்போது நீரைக் கண்டால் அவருடைய தயம்மும் முறிந்துவிடும். ஏனெனில் தயம்மத்திற்கான காரணம் அற்றுப்போய்விட்டது.

ஆனால், தொழுது முடிந்த பின் நீரைக் கண்டால் தொழுகையை மீட்டத்தேவையில்லை. அதேபோல் எக் காரணங்களுக்காக தயம்மும் செய்தோமோ அவை நீங்கி தண்ணீரை பயன்படுத்தமுடியுமாக இருந்தால் தயம்மும் முறிந்துவிடும். உதாரணமாக நோய் குணமடைதல், கடுங்குளிர் இல்லாமல் போதல், அச்சசூழல் நீங்குதல் ஆகியவற்றை குறிப்பிடலாம்.

வுழூ: அல்லது குளிப்பு இரண்டின் மூலம் நிறைவேற்றக்கூடிய அனைத்து வணக்கங்களையும் தயம்மும் மூலமும் நிறைவேற்றலாம். கடமையான மற்றும் சுன்னத்தான தொழுகைகளையும் நிறைவேற்ற முடியும்.

நபி (ஸல்) அவர்கள் நவின்றார்கள்: சுத்தமான மண் ஒரு முஸ்லிமை சுத்தப்படுத்தும் சாதனமாக அமையும், பத்து வருடங்கள் நீரை பெற்றுக் கொள்ளாவிடினும் சரியே! நீரை பெற்றுக் கொண்டால் தன் மேனியில் நீரை படச் செய்யட்டும் அது அவனுக்கு நன்று. (திர்மிதி:124)